பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண்: 656 **நாள்: 06.11.2026**

மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. ப. வெங்கடரமணன் அவர்கள், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. வ. காந்திராஜ் அவர்கள், இராயபுரம் மண்டலத்தில் ரூ.79 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பல்நோக்குக் கட்டடத்தினையும் அதில் அமைந்துள்ள நியாய விலைக் கடையினையும் இன்று திறந்து வைத்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கினர்.

இன்று (06.11.2026) மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. ப. வெங்கடரமணன் அவர்கள், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. வ. காந்திராஜ் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், வார்டு-59க்குட்பட்ட ஜசக் தெருவில் மாநகராட்சி மூலதன நிதியில் ரூ.79 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பல்நோக்குக் கட்டடத்தினை திறந்து வைத்து, அதில் அமைந்துள்ள நியாய விலைக் கடையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கினர். மேலும், 10 நபர்களுக்கு புதிய குடும்ப அட்டைகளை வழங்கினர்.

இந்த பல்நோக்கு கட்டடம் தரைத்தளம் மற்றும் முதல் தளத்தில் தலா 673 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. தரைத்தளத்தில் நியாய விலைக் கடையும், முதல் தளத்தில் மாநகராட்சி அலுவலகக் கட்டடமும் அமைந்துள்ளது.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மக்களுக்கு வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களின் தரத்தினை ஆய்வு செய்தனர்.

இந்நிகழ்ச்சியில், கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் திரு.க.தர்ப்பகராஜ், இ.ஆ.ப., வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., மண்டல அலுவலர் திரு.நா.சத்தியநாராயணன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்

பெருநகர சென்னை மாநகராட்சி